செப்டம்பர் 14,2016 IST

DINAMALAR
National Tamil Daily

உலக தமிழர் செய்திகள்

# சிங்கப்பூரில் நேர மேலாண்மை இலசவப் பயிலரங்கு

சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர்க் கிளை, மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்யும் நோக்கில் நேர மேலாண்மை பற்றிய இலவச கருத்தரங்கை நடத்தியது. தொடக்க நிலை நான்காம் வகுப்பு முதல் உயர்நிலை நான்காம் வகுப்பு வரை பயிலும் சுமார் 100 மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர். மாணவர்களின் பெற்றோர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் முப்பது ஆண்டுகள் அனுபவம் பெற்ற பேராசிரியர் அமானுல்லா இப்பயிலரங்கை நடத்தினார். பாடங்களைப் பயிலும் பொழுதும் தேர்வு நேரத்திலும் எவ்வாறு முறையாக நேரத்தை நிர்வகித்துத் திறம்படச் செயல்பட வேண்டும் என்ற நேர மேலாண்மை தொடர்புடைய பத்து யுக்திகள் இப்பயிலரங்கில் விளக்கப்பட்டன. நாடாளு மன்ற நியமன உறுப்பினர் கே.தனலட்சுமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய பயிலரங்கு தொடர்ந்து நடத்தப்படும் என சங்கத் தலைவர் பட்டயக் கணக்காய்வாளர் காதர் அறிவித்தார். தேர்வு நேரத்தில் இத்தகைய பயிலரங்கு மிகவும் பயனுடையதாக இருந்ததெனப் பெற்றோர் குறிப்பிட்டனர்.




அடுத்து

சிங்கப்பூரில் நேர மேலாண்மை இலசவப் பயிலரங்கு

**– நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்**

முந்தைய
அடுத்து




சிங்கப்பூரில் நேர மேலாண்மை இலசவப் பயிலரங்கு

முந்தைய
அடுத்து



சிங்கப்பூரில் நேர மேலாண்மை இலசவப் பயிலரங்கு

முந்தைய



z